

1876-ஆம் ஆண்டு ஜூலை 15-ஆம் நாள்

இயற்பெயர் : சாமி வேதாசலம்

ஊர் : நாகை மாவட்டம் காடம்பாடி

பெற்றோர் : சொக்கநாதப் பிள்ளை,
சின்னம்மா அம்மையார்

மகள் : நீலாம்பிகை அம்மையார்



வேறு பெயர்கள்:

- தனித்தமிழ் மலை
- தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை
- தனித்தமிழ் இலக்கியத்தின் தந்தை
- தன்மான இயக்கத்தின் முன்னோடி
- தமிழ் கால ஆராய்ச்சியின் முன்னோடி

புனைப்பெயர்:

- முருகவேள்



உரைநடை நூல்கள்:

- பண்டைத்தமிழரும்ஆரியரும்
- மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்
- வேளாளர் யாவர்
- சைவ சமயம்
- தமிழர் மதம்
- அம்பலவாணர் கூத்து
- தமிழ்த்தாய்
- தமிழ்நாட்டவரும்மேல்நாட்டவரும்
- அறிவுரைக் கொத்து
- மக்கள் 100 ஆண்டுகள் வாழ்வது எப்படி?
- மரணத்தின் பின் மனிதனின் நிலை
- சோமசுந்தரக்காஞ்சியாக்கம்
- தென்புலத்தார் யார்?
- சாதி வேற்றுமையும்போலிச்சைவமும்
- தொலைவில் உணர்த்தல்
- Ancient and modern tamil poets



செய்யுள் நூல்கள்:

- திருவெற்றியூர்முருகர்மும்மணிக்கோவை
- சோமசுந்தரக்காஞ்சி

ஆய்வு நூல்கள்:

- முல்லைப்பாட்டு ஆராய்ச்சி
- பட்டினப்பாலை ஆராய்ச்சி
- சிவஞானபோத ஆராய்ச்சி
- குறிஞ்சிப்பாட்டு ஆராய்ச்சி
- திருக்குறள் ஆராய்ச்சி

நாடகம் :

- சாகுந்தலம்(மொழிப்பெயர்ப்பு)
- குமுதவல்லி
- அம்பிகாபதி அமராவதி



நாவல்:

- கோகிலாம்பாள் கடிதங்கள்
- குமுதினி அல்லது நாகநாட்டு இளவரசி

இதழ் :


- அறிவுக்கடல்(ஞானசாகரம்) - 1902
- The ocean of wisdom - 1935



தமிழ், ஆங்கிலம், வடமொழி என
மும்மொழியிலும் வல்லவர்

சைவத்தையும் தமிழையும் தம் உயிராக
கொண்டவர்

சென்னை கிறித்துவக் கல்லூரியில்
பேராசிரியராக பணியாற்றியவர்.



சாமி வேதாசலம் என்ற தன் வடமொழி
பெயரை மறைமலை அடிகள் என
தமிழில் மாற்றிக்கொண்டார். வேதாசலம்
என்ற தன் பெயரை தூய தமிழில் மாற்ற விரும்பினார்.
அந்த பெயரை வேதம், அசலம் என்று இரண்டு
சொற்களாகப் பிரிக்கலாம். வேதம் என்ற
வடமொழி சொல்லுக்கான தூய தமிழ்ச்சொல்
மறை. அசலம் என்பதற்கான தூய தமிழ்ச்சொல்
மலை. சுவாமி என்பதற்கான தூய தமிழ்ச்சொல்
அடிகள். எனவே சுவாமி வேதாசலம் என்ற பெயர்
'மறைமலை அடிகள்' என்றானது



“சிறுவர்க்கான செந்தமிழ்” என்ற தலைப்பில்
பாடநூல்களையும் வரைந்துள்ளார்.

அடிகளின் “அறிவுரைக் கொத்து” என்ற நூலே
“கட்டுரை” என்ற தமிழ்ச்சொல்லையும்,
கட்டுரை எழுதும் முறைகளையும் மாணவர்களிடையே
பரப்பிற்று.



திரு.வி.க :
மறைமலை ஒரு பெரும் அறிவுச் சுடர்;
தமிழ் நிலவு;
சைவ வான்;
தென்னாடு பன்னெடுங்காலம் தன்னை மறந்து உறங்கியது. அவ்வுறக்கம்போக்கிய பெருமை அடிகளாருக்கே சேரும்.



மறைமலை அடிகள்.
தமிழாசிரியர் பணித் தேர்வுக்கு தம்மை தயார் செய்து கொண்டார். அந்தப் பணிக்காக நடைபெற்ற நேர்முகத் தேர்வில் மறைமலை அடிகளின் புலமையை சோதித்தவர் அப்போது புகழ் பெற்றிருந்த பரிதிமார் கலைஞர் என்ற தமிழறிஞர்.





அப்போது அவர், "குற்றியலுகரத்துக்கு எடுத்துக்காட்டு சொல்லுங்கள்" என்று கேள்வி கேட்டார். "அஃது எனக்குத் தெரியாது" என்றார் மறைமலை அடிகள். "நீங்கள் தேர்வு செய்யப்பட்டுவிட்டீர்கள்" என்றார் பரிதிமாற்கலைஞர். "தெரியாது" என்று சொல்பவரை, "எப்படித் தேர்வு செய்யலாம்" என்று மற்ற உறுப்பினர்கள் கேட்டபோது, " 'அஃது' என்பது, ஆயுதத் தொடர் குற்றியலுகரம். 'எனக்கு' என்பது, வன்தொடர்க் குற்றியலுகரம். 'தெரியாது' என்பது, உயிர்த்தொடர் குற்றியலுகரம்" என்று பதிலளித்தார். பரிதிமாற்கலைஞர். வேலை கிடைத்துவிட்டபோதிலும் பரிதிமாற்கலைஞரையே கேள்வி கேட்டு வியக்கவைத்தவர் மறைமலை அடிகள்.





காலப்போக்கில் தனக்கு சோறு போட்ட தமிழ் மொழியின் மேம்பாட்டுக்காக தன் வாழ்க்கையை அர்ப்பணிக்கத் துணிந்தார் மறைமலை அடிகள். தமிழாசிரியர் பணியை விட்டு விட்டு சொந்தமாக தொழில் தொடங்கினார். ஆங்கிலம், சமஸ்கிருதம் போன்ற மொழிகள் தமிழில் பரவிக் கிடந்ததை உணர்ந்து வருந்திய மறைமலை அடிகள் கலப்படத்திலிருந்து தமிழை மீட்கவும், தனித்தமிழில் பேசவும், எழுதவும் தமிழர்களுக்கு ஊக்கமூட்ட முடிவெடுத்தார். வெறும் பேச்சோடு நின்று விடாமல் அதற்கு ஒரு முன்னுதாரணமாக செயல்படத் தொடங்கினார். தனித்தமிழ் இயக்கத்தை நிறுவினார். அப்போதுதான் தன் பெயரை மறைமலை அடிகள் என்று மாற்றிக் கொண்டார். அவரைப் பின்பற்றி பல தமிழர்கள் தங்களுக்கு தூய தமிழில் பெயர் சூட்டிக் கொண்டனர்.

முல்லைப்பாட்டு, பட்டினப்பாலை போன்ற நூல்களுக்கு எளிமையான தமிழில் உரை எழுதினார். கடுமையானத் தமிழாக இல்லாமலும், கலப்புத் தமிழாக இல்லாமலும் எவரும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் தூயத் தமிழை அவர் பயன்படுத்தினார். வடமொழியில் காளிதாசன் படைத்த சாகுந்தல எனும் காதல் காவியத்தை தமிழில் மொழிப் பெயர்த்தார்.



தனித்தமிழ் இயக்கத்தின் காரணமாக அந்தக்கால கட்டத்தில் வழக்கத்திலிருந்த பல சமஸ்கிருத சொற்கள் வழக்கொழிந்து போயின. நமஸ்காரம், ஜலம், சந்தோஷம், போன்ற வடமொழி சொற்கள் முறையே வணக்கம், நீர், மகிழ்ச்சி, என்றாயின. அந்தத் தூய தமிழுக்கு நாம் நன்றி சொல்ல வேண்டியது மறைமலை அடிகளுக்குதான். தமிழையே உயிர் மூச்சாக சுவாசித்த அவர் தம் வாழ்நாளில் மொத்தம் 56 நூல்களை எழுதினார். அவருக்கு கடவுள் பக்தி நிறைய இருந்தாலும் முற்போக்கு சிந்தனையும் அதிகமாக இருந்தது.





தம் வாழ்நாளில் அவர் காதலித்த விசயங்கள் இரண்டு ஒன்று தமிழ், மற்றொன்று மனைவி சௌந்தரம். எனவே மனைவி இறந்த சில மாதங்களிலேயே பிரிவைத் தாங்காமல் அவரும் மரணத்தைத் தழுவினார். கடைசி வரை தமிழுக்காக உழைத்த மறைமலை அடிகள் 1950-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ஆம் நாள் தமது 75-ஆவது வயதில் காலமானார்.

## ந.மு. வேங்கடசாமி நாட்டார்

| | | |
|---|---|---|
| காலம் | - | 12 - 04 - 1884 முதல் 1944 வரை |
| ஊர் | - | நடுக்காவேரி (தஞ்சை) |
| பெற்றோர் | - | முத்துசாமி நாட்டார், தைலம்மாள் |
| இயற்பெயர் | - | சிவப்பிரகாசம் |

- மதுரைத் தமிழ் சங்கத்தில் முதலில் தங்கத் தோடா பரிசு பெற்றவர்.
- அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் புலவராய் விளங்கிய நாவலர் பண்டித ந.மு. வேங்கடசாமி நாட்டார்.
- புரைதீர்ந்த தமிழில் பெரும் புலமை பெற்றவர். இவர் மாணவர்க்குக் கல்வி போதிப்பதில் ஒப்பற்ற ஊக்கமும் திறமையும் பெற்று விளங்கியவர். சொற்பொழிவாற்றுவதிலும் வல்லவர்.
- இக்கால ஆராய்ச்சியிலும் தேர்ந்து விளங்கினார்.
- நல்லிசைப் புலவர் பலருடைய வாழ்க்கை வரலாறுகளை நுண்ணிதின் ஆய்ந்து தனித்தனி நூல்கள் எழுதியுள்ளார்.

- அன்பும், அடக்கமும், அமைதியும் அணிகலனாய்ப் பூண்ட இப்பெருமகனே பண்டித நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் ஆவார்.
- வேங்கடசாமிக்கு முதலில் இட்ட பெயர் சிவப்பிரகாசம். தொண்டையில் கட்டி ஏற்பட்டு திருப்பதிக்கு வேண்டிக் கொண்ட பின் குணமானதால் வேங்கடசாமி என்று பெயர் மாற்றம் பெற்றார்.
- வேங்கடசாமியின் தந்தையார் முத்துசாமி நாட்டார். தமிழ் இலக்கியப் பயிற்சி உடையவர்.
- அக்கால வழக்குப்படி உள்ளூர் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் நான்காம் வகுப்புவரை படித்தவர்.
- நெடுங்கணக்கு இலக்கம், நெல்லிலக்கம், எண்சுவடி, குழிமாற்று ஆகிய கணக்குச் சார்பான சுவடிகளைப் படித்து முடித்த பின்னர் தம் தந்தையார் மூலம் ஆத்திசூடி,

- திண்ணைப் பள்ளியில் நான்காம் வகுப்பு வரை படித்தார். பச்சையப்பன் கல்லூரியில் பி.ஏ. பட்டம் பெற்ற பின் சட்டம் பயின்றார்.
- மதுரைத் தமிழ்ச்சங்கம் அக்காலத்தில் 'பிரவேச பண்டிதம்', 'பால பண்டிதம்', 'பண்டிதம்' என்னும் மூன்று தேர்வுகளை நடத்தி வந்தது. ஆறு ஆண்டுகள் படித்து தேர்வு எழுத வேண்டிய அம்மூன்று தேர்வுகளையும் ந.மு. வேங்கடசாமி நாட்டார் மூன்றே ஆண்டுகளில் அதாவது 1905, 1906, 1907 ஆண்டுகளில் எழுதி தேர்ச்சி பெற்றார்.
- இத்தேர்வுகளுக்குப் பிறகு 'பண்டிதர்' என்ற பட்டத்தைப் பெற்றார்.
- 1940இல் சென்னை மாகாணத் தமிழ் மாநாடு சென்னையில் நடைபெற்றது. அம்மாநாட்டில் நாட்டாருக்கு 'நாவலர்' என்ற சிறப்பு பட்டம் அளிக்கப்பட்டது.

## உரைநூல்கள்

- ஆத்திசூடி,
- கொன்றை வேந்தன்,
- இன்னா நாற்பது,
- களவழி நாற்பது,
- கார் நாற்பது,
- வெற்றி வேற்கை
- மூதுரை,
- நல்வழி
- நன்னெறி,
- சிலப்பதிகாரம்,
- மணிமேகலை,
- திருவிளையாடற் புராணம்,

SURYA ACAD

# படைப்புகள்

1. கபிலர்
2. கண்ணகி வரலாறு
3. சோழர் சரித்திரம்
4. நக்கீரர்
5. வேளிர் வரலாறு
6. கள்ளர் சரித்திரம்

SURY

## மறைவு

- 1944 இல் ந.மு.வே நாட்டாருக்கு மணிவிழா கொண்டாடுவதென செயற்குழுவினர் முற்பட்ட போது எதிர்பாராத நிலையில் இவர் திடீரென காலமானர்.
- இவருக்கு சமாதி வைக்கப்பட்ட இடத்தில் ஒரு கற்கோயில் எழுப்பப்பட்டது. தமிழ்ப் புலவர் ஒருவர் மறைந்த இடத்தில் கற்கோயில் எழுப்பப்பட்டது இதுவே முதல் முறையாகும்.
- இவருக்கு தமிழகம் முழுவதும் இரங்கல் கூட்டங்கள் நடைபெற்றன.
- இவரது நூற்றாண்டு விழாவை 22.04.1984 இல் தமிழக அரசு தஞ்சையில் கொண்டாடியது.

SURYA ACADEMY



திரு. வி. க.
(1883 - 1953)

- திரு.வி. கல்யாணசுந்தரனார் அவர்கள் 1883 ஆகஸ்ட் மாதம் 25 விருத்தாசல முதலியார், சின்னம்மா தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார்.
- இவர் பிறந்த இடம் காஞ்சிபுரத்தில் உள்ள துள்ளம் என்ற சிற்றூர்.

- இவரது முன்னோர்கள் திருவாரூரைச் சேர்ந்தவர்கள்.

- திருவாரூர் விருத்தாசல கல்யாணசுந்தரனார் என்பதன் சுருக்கமே திரு.வி.க.

- தமிழ் மீது ஆர்வம் கொண்ட திரு.வி.க வெஸ்லி பள்ளியில் ஆசிரியராக இருந்த யாழ்ப்பாணம் நா. கதிரவேற்பிள்ளை என்ற தமிழறிஞரிடம் தமிழ் நூல்களை முறையாக கற்று தமிழில் சிறந்த புலமை பெற்றார்.

- 1906 ஆம் ஆண்டு ஸ்பென்சர் தொழிலகம் என்ற ஆங்கில நிறுவனத்தில் கணக்கராகச் சேர்ந்தார் திரு.வி.க.

- 1909 ஆம் ஆண்டு ஆயிரம் விளக்கு பகுதியில் உள்ள வெஸ்லியன் பள்ளியில் ஆசிரியராக சேர்ந்து ஆறு ஆண்டுகள் பணி புரிந்தார்.

- 1917 ஆம் ஆண்டு நாட்டிற்கு உழைப்பதற்காக அவர் அப்பணியில் இருந்தும் விலகி தேசபக்தன் என்ற பத்திரிகையில் ஆசிரியராகப் பணி புரிந்தார்.

- நவசக்தி இதழின் ஆசிரியராக பணியாற்றினார்.

- 1919 ஆம் ஆண்டு தான் திரு.வி.க அவர்கள் மகாத்மா காந்தியடிகளை முதன்முதலாகச் சந்தித்தார்.

- பெரு நூலாக "மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்" என்ற பெயரில் 1926 ஆம் ஆண்டு வெளியிட்டார்.

- மகாத்மா காந்தியை முதன் முதலில் காந்தியடிகள் என்று அழைத்தவர் திரு.வி.க..
- 1918 ஆம் ஆண்டு இந்தியாவிலேயே முதன் முதலில் தொழிற்சங்கம் தொடங்கியாவர் திரு.வி.க தான்.

- அவருடைய தமிழாசிரியர் நா. கதிரவேல் பிள்ளையின் மறைவுக்குப் பின், அவர் வாழ்க்கை வரலாற்றை "நா. கதிரவேல் பிள்ளை சரித்திரம்" என்ற பெயரில் எழுதியுள்ளார்.

- "பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை",
- "இந்தியாவும் விடுதலையும்",
- "திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புகள்",
- "பரம்பொருள் அல்லது வாழ்க்கை வழி",
- "உள்ளொளி" ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

- புதிய உரைநடையின் தந்தை என்றும் தமிழ் மேடைப் பேச்சின் தந்தை என்றும் போற்றப்பட்டவர்.

- இவரது உணர்ச்சிமிகு பேச்சுக்கு அப்போது இளைஞராக இருந்த அறிஞர் அண்ணா ரசிகராக இருந்தார்.


- 'எங்கும் எவரும் தமிழிலேயே பேசவேண்டும்' என்று முழங்கியதற்காக அவருக்கு புரட்சி வீரர் பட்டம் வழங்கப்பட்டது.

- பெண்ணின் பெருமை இவ்வுலகில் சிறக்க தனது எழுத்துக்கள் வாயிலாக அரும்பாடு பட்டார்.

- அவரது நூல்களில் எல்லாம் பெண்களின் பெருமையை பற்றி எழுதினர்.

- 1943 ஆம் ஆண்டு திரு.வி.கவிற்கு மணிவிழா எடுக்கப்பட்டது.
- 1953 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17 ஆம் தேதி காலமானார்.


- தமிழக அரசு ஆண்டுதோறும் திரு.வி.க. பெயரில் சிறந்த எழுத்தாளர் ஒருவருக்கு விருது வழங்குகிறது.




- திரு.வி.கவை கவுரவிக்கும் வகையில் 2005 ஆம் ஆண்டு இந்திய அரசு அவரது உருவப்படத்துடன் கூடிய அஞ்சல் தலையை வெளியிட்டது.

# அயோத்திதாசப் பண்டிதர்


- பிறப்பு : மே - 20 - 1845
- இறப்பு : மே - 05 - 1914
- இயற்பெயர் : காத்தவராயன்
- இடம் : மெட்ராஸ் மாகாணம்




**சிறப்பு பண்புகள்:**

- ஒரு தீவிர தமிழ் அறிஞர்

## சிறப்பு பண்புகள்:




- ஒரு தீவிர தமிழ் அறிஞர்
- சித்தமருத்துவர்
- பத்திரிக்கையாளர்
- சமூக அரசியல் செயல்பாட்டாளர்
- அரசியல் சிந்தனையாளர்
- தென்னிந்திய சமூக சீர்திருத்தத்தின் தந்தை

**மொழிகள்:**

- தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், பாலி

**இதழ்கள்:**

- ஒரு பைசா தமிழன்
- தமிழன்
- திராவிட பாண்டியன்


ஒரு பைசாத் தமிழன்

**அமைப்புகள்:**

- திராவிடர் கழகம்

- திராவிடர் கழகம்
- திராவிட மகாஜன சபை
- அத்வைதானந்தா சபா
- சாக்ய பௌத்த சங்கம்
- தமிழ் பௌத்த மறுமலர்ச்சி இயக்கம்

சிறப்புகள்:

- இதழியல் - கருவி
- சமூக நீதிக்காக இயக்கம் நடத்தினார்

- இதழியல் - கருவி
- சமூக நீதிக்காக இயக்கம் நடத்தினார்
- ஒடுக்கப்பட்டோர் விடுதலை பெற பாடுபட்டார்
- சாதிய மேலாதிக்கம், தீண்டாமைக்கும் எதிராக கண்டனக் குரல் எழுப்பினார்
- தமிழகத்தில் ஒடுக்கப்பட்டோருக்கான பல பள்ளிகளை நிறுவினார்

- ஒடுக்கப்பட்டவர்களை சாதி பேதமற்ற திராவிடர் - சாதியற்ற திராவிடர்கள்
- சென்னை மாகாண சங்கம் - இரண்டு கோரிக்கைகள்
- தீண்டத்தகாதவர்கள் இந்துக்கள் அல்லர்
- பெரியார் - பகுத்தறிவு கருத்துகளுக்கு முன்னோடி
- தேசிய சித்த மருத்துவ ஆணையம்
- படைப்புகள் நாட்டுடைமை
- அஞ்சல் தலை

**படைப்புகள்:**

- இந்திர தேச சரித்திரம்
- புத்தரது ஆதிவேதம்
- விவாக விளக்கம்
- புத்தர் சரித்திரப்பா
- திருவள்ளுவர், ஔவையாரின் படைப்புகள்

பதிப்புகள்:

- போகர் எழுநூறு
- அகத்தியர் இருநூறு

## பதிப்புகள்:

- போகர் எழுநூறு
- அகத்தியர் இருநூறு
- சிமிட்டு ரத்தின சுருக்கம்
- பாலவாகடம்

கூற்றுகள்:

- நிலவு வளர்வது போல அறிவை வளர்க்க நூல்கள் தேவை
- வானம் பொய்க்க, காரணம் ஒழுக்கமுள்ள ஞானிகள் இல்லாமையே
- பிராமணியத்தால் ஒடுக்கப்பட்டவர்கள் உண்மையான பௌத்தர்கள்.